(1975 மார்ச் 21)

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, இப்போது கேரள அரசாங்கம் விதித்துள்ள தடை தற்காலிகமானதுதான் என்று தெரியப்படுத்தியிருந்தாலும், இதன் காரணமாக இந்தத் தொழிலில் நமது மாநிலத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தொழிலாளர்கள் 30 ஆயிரம் பேர் வேலை இழக்கிறார்கள். இவர்கள் வேலையிழந்து போன பிறகு— தடை நீங்கி, நார் வந்து இவர்கள் திரும்ப வேலை பெறுவதற்குள் இவர்களது குடும்பங்கள் வறுமையினால் பாதிக்கப்பட்டு மிகுந்த அல்லலுக்கு ஆளாக வேண்டிய நிலைதான் இருக்கிறது. ஆகவே இப்போது உடனடியாக இவர்கள் வேலை இழக்காமல் இருக்க இவர்களுக்கு நார் கிடைப்பதற்கு தமிழகத்திலேயே,—இயந்திரங்கள் உதவிகொண்டு சில இடங்களில் நல்ல நார் தயாரிக்கிறார்களே,—அவர்களுக்கு எல்லாம் தொழில்துறை அமைச்சர் கடன் உதவியோ, மானிய உதவியோ அளித்து அதிக அளவுக்கு நார் உற்பத்தி செய்து அதன்மூலம் இவர்கள் வேலை இழக்காமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THD HON. THIRU S. J. SADIQ PASHA : To mitigate the hardship experienced by the workers as well as the small manufacturers of coir, it has been suggested that small mechanised de-fibring units may be started in Salem by means of dvances and loans by the Government at Rs. 7,500 for small factories. அதை அடுத்து,

One acre is having about 100 coconut trees and one tree yields about 80 coconuts per year. In Salem district coconut trees are grown in about 7,000 acres. Natural facilities for soaking the fibre are not available in Salem. So, small tanks may have to be constructed for soaking fibre to help the small manufacturers, to make the manufacture of coir self-supporting.

It is understood that the Project Officer, Salem, has addressed the Government through the Director of Industries and Commerce, Madras, to supply fibre through the Central Coir Marketing Industrial Co-operative Society by granting permit to enable them to get fibre from the Kerala Government.

நம்முடைய அரசும் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல நம் நாட்டிலேயே இயந்திரங்கள் மூலம் நார் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது.

(1975 மார்ச் 21)

7. அரசினர் தீர்மானங்கள்.

(அ) மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் 164வது விதியின்கீழ், 1975-76ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவில் உறுப்பினராக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்" என்கிற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

8. அறிவிப்புகள்.

(அ) மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ் மதிப்பீட்டுக் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 7—4—1975 திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள், 7—4—1975 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 8—4—1975 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினாறுக்கு மேற்படுமாயின் 10—4—1975 வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே பேரவைக் குழுக்கள் கூடும் அறையில் (உறுப்பினர்கள் முன்னுள் ஓய்வறையில்) வாக்கெடுப்பு நடைபெறும்.

7. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 173 ஆவது விதியின் கீழ், 1975-76 ஆம் ஆண்டிற்கான பொதுக்கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்" என்கிற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

8. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ் பொதுக்கணக்காய்வுக் குழுவிற்கு 16 உறுப்பினர் களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 7—4—1975, திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண் டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள், 7—4—1975, திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட் பாளர்கள் 8—4—1975, செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினாறுக்கு மேற் படுமாயின் 10—4—1975 வியாழக்கிழமை, முற்பகல் 9 மணிக்கும் பிற் பகல் 1 மணிக்கும் இடையே பேரவை குழுக்கள் கூடும் அறையில் (உறுப் பினர்கள் முன்னுள் ஓய்வறையில்) வாக்கெடுப்பு நடைபெறும்.

7. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(இ) பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 182-ஏ விதியின் கீழ் 1975-76ஆம் ஆண்டிற்கான பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவின் உறுப் பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேர வைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்," என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

8. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், பொதுத் தொழில் நிறுவனங்கள் குழு